# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093857

1. District மாவட்டம் : வேலூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 04/2019 Date: நாள் 28-01-2019

2. (i) Act சட்டம்: Cr PC Sections பிரிவுகள்: U/S 102 CrPC r/w
 (ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of PC (Amendment)
 (iii) Act சட்டம்: Act (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Act 2018
 (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 04-01-2019
 Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Before 19.45 hrs
 (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05-01-2019 Time : நேரம் 10 00 hrs
 (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I 5-01-2019 Time : நேரம் 10-00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 6 கி.மீ. தெற்கு
 Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம், அடுக்கம்பாறை, வேலூர் மாவட்டம்
 (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. ஜோதி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சீனுக்
 (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
 Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
 (f) Occupation : தொழில் [illegible] அலுவலக உதவியாளர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் வேலூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
 (1) திரு. K. சரவணன், த/பெ கணேசன், சுகாதார ஆய்வாளர் (நிலை-1) அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கணியம்பாடி அயல்பணி — வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — மருத்துவமனை, பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம், வேலூர். புகாரினை பெற்று, ஊழல் தடுப்பு (கண்காணிப்பு பிரிவு) உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று விசாரணை மேற்கொண்டு சில நெறிமுறை பெற்று பின்னர் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/01/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28/1/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28-01-2019 at 1300hrs.

Name: பெயர் S. விஜயலட்சுமி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No எண்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
[illegible]

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16 HCL-12)p 2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> 05.01.2019 காலை 1000 மணிக்ககு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது திரு. S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் அவர்கள் அலுவகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, நாள்: 05.01.2019 அனுப்புநர்: S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம். பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – வேலூர் மாநகர் அடுக்கம்பாறையில் உள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவில் இயங்கி வரும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் அலுவலகம் - திடீர் தணிக்கை – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – மனு.---04.01.2019 ஆம் தேதி மாலை சுமார் 1815 மணிக்கு நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் எங்களுடைய அலுவலக தொலைபேசிக்கு, கட்டுப்பாட்டு அறையில் இருந்து இணைக்கப்பட்ட தொலைபேசி அழைப்பில், தன்னுடைய பெயர் விலாசம் தெரிவிக்க விரும்பாத ஒருவர் தான் வேலூர் மாவட்டம் குடியாத்தத்தை சேர்ந்த திரு.ஆனந்தன் என்பவரின் இறப்பு சான்றிதழ் பெறுவதற்காக வேலூர் அடுக்கம்பாறையில் உள்ள வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள பிறப்பு இறப்பு அலுவலகத்தை அணுகியதாகவும், அங்கிருந்த அலுவலர்கள் தங்களை மிகவும் அலைக்கழித்ததாகவும், தாங்கள் மூன்று இறப்பு சான்றிதழ்கள் கோரி விண்ணப்பித்ததாகவும், அதற்குரிய சலானை வங்கியில் செலுத்துவதாக தான் சொல்லியும், அந்த அலுவலர்கள் அதை கேளாமல் அவர்களிடம் ரூ.1,000/- கொடுத்தால் தான், அந்த மூன்று இறப்பு சான்றிதழ்களையும் வழங்குவதாக சொன்னதாகவும், மேலும், அந்த நபர் அதற்கு தான் இரண்டு ரூ.500/- நோட்டுக்களை அந்த அலுவலரிடம் 04.01.2019-ஆம் தேதி கொடுத்ததாகவும், அதனுடைய எண்களை தான் குறித்து வைத்திருப்பதாகவும், அந்த வரிசை எண்கள் முறையே 6TB 090715 மற்றும் 8PQ 881644 எனவும், அந்த நோட்டுக்களை அந்த அலுவலர் வாங்கி அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டதாகவும், சந்தேகமிருந்தால், அந்த அலுவலத்தில் பணிபுரியும் அந்த அலுவலரை சோதனை செய்து கைப்பற்றி சரி பார்த்துக்கொள்ளுமாறு சொன்னதாகவும், மேலும், அந்த நபர் மேற்படி அலுவலகத்தில் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு பதிவு செய்யும் ஏழை பொது மக்களிடம் அதற்குண்டான அரசு

கட்டணமான ரூ.200/-ம், வங்கியில் சலானாக செலுத்தியபின் சம்மந்தப்பட்டவர் கேட்கும் சான்றிதழ்களை வழங்குவதற்கு பதிலாக, அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு அதிகமாக சுமார் ரூ.50/- முதல் ரூ.150/- வரை கூடுதலாக ஏழை பொது மக்களிடம் இருந்து நேரடியாக கட்டாயப்படுத்தி லஞ்சமாக பணம் வசூல் செய்வதாக எனக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலை, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்ததின் பேரில், அத்தகவலை தகவலர்கள் மூலம் உறுதி செய்துகொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் பாதுகாப்பில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என்னால் 04.01.2019-ஆம் தேதி இரவு 19.45 மணிக்கு மேற்படி வேலூர் மாவட்டம் அடுக்கம்பாறையில் உள்ள அரசு வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், மகப்பேறு பிரிவு உள்ள கட்டிடத்தில் தரை தளத்தில் இயங்கி வரும் பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையில், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலருடன் இருதுறை திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி மருத்துவக்கல்லூரியின் சீமா பிளாக்கில் உள்ள மகப்பேறு பிரிவு மற்றும் பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சை பிரிவின் நுழைவாயிலில் பாதுகாப்பு பணியில் இருந்த செக்யூரிட்டியிடம் அறிமுகப்படுத்திக்கொண்ட பின் அவர் உள்ளே அனுமதித்தார். அந்த நுழைவாயிலின் உள்ளே நுழைந்தவுடன் மேற்கே OG Casuality -யும் கிழக்கு திசையில் பிறப்பு இறப்பு பதிவிற்கான கண்ணாடியால் ஆன Counter திறந்திருந்தது. அந்த காத்திருப்போர் ஹாலின் தெற்கில் உள்ள நுழை வாயிலில் இருந்த பெண் செக்யூரிட்டியிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு, கதவை திறக்க சொன்னதன் பேரில் அவர் அந்த கதவை திறந்தார். அந்த வாயிலின் வழியாக உள்ளே நுழைந்தவுடன் இடது புறத்தில் முதல் அறையான பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் கதவு மூடப்பட்டிருந்தது. அந்த கதவை தட்டியவுடன், ஒரு ஆண் நபர் வந்து கதவை திறந்து என்னவென்று விசாரித்தார். அவரிடம் குழுவினரை அறிமுகப்படுத்திக்கொண்டவுடன் உள்ளே வரச்சொன்னார். பின்னர் அந்த அறையில் உள்ளே நுழைந்தவுடன் அங்கு மேலும் ஒரு ஆண் நபர் இருந்தார். அவர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு, மீண்டும் எங்களின் சுயபரிசோதனைக்கு பின், அவர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம் கேட்க, அதில் ஒருவர் தனது பெயர் தயாளன் என்றும், தான் சுகாதார ஆய்வாளராக கத்தாழம்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அயல் பணியாக கடந்த 01.10.2018-ஆம் தேதி முதல் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் பிறப்பு இறப்பு அலுவலர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர் அங்கிருந்த

மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் நீலவண்ணன் என்றும், தான் சுகாதார ஆய்வாளராக ஆற்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அயல் பணியாக கடந்த 20.11.2018-ஆம் தேதி முதல் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் பிறப்பு இறப்பு அலுவலர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக சொன்னார். திரு. நீலவண்ணன் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரது சட்டையின் வெளிப்புற இடது பக்க பாக்கெட்டில் ரூ.20/- மட்டும் இருந்தது. அந்த பணத்தை திரு.நீலவண்ணன் தனது சொந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.20/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து சுகாதார ஆய்வாளர் திரு.தயாளன் என்பவரை திரேக சோதனை செய்ய, அவர் அணிந்திருந்த சட்டையின் வெளிப்புற இடது பக்க பாக்கெட்டில் சோதனை செய்ய, அதில் கத்தையாக பணம் இருந்தது. அது குறித்து திரு.தயாளனிடம் விளக்கம் கேட்க, அவர் தன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது என்று தெரியாது என்றும், சட்டை பாக்கெட்டில் இருந்த அந்த பணம், 04.01.2019-ஆம் தேதி பிறப்பு, இறப்பு சான்று வழங்க கேட்ட பொதுமக்களிடம் இருந்து அரசு கட்டணமாக வசூல் செய்த பணம் என்று சொன்னார். தாங்கள் அரசிற்கு செலுத்த வேண்டிய தொகையை பொது மக்களிடம் இருந்து பணமாக பெறலாமா என்றும், சம்மந்தப்பட்ட நபர் வங்கியில் சலான் மூலம்தானே அரசிற்குண்டான பணத்தை செலுத்தி தங்களிடம் சலானைத்தானே வழங்க வேண்டும் என்று கேட்டதற்கு, திரு. தயாளான், தான் பணமாக அதனை பெறும் அதிகாரம் உள்ளவர் என்றும், என்னுடைய உயர் அதிகாரிகள் தனக்கு அந்த அதிகாரத்தை வழங்கியுள்ளதாக சொன்னார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் ரூ.11,400/- இருந்தது. அப்பணத்தை பொது மக்களிடம் இருந்து, அவர்களுக்கு வழங்கிய பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குவதற்காக அத்தாட்சி பெற்ற பதிவேடுகளை கேட்க, திரு.தயாளன் அவர்கள் அந்த பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அதைப் பார்க்க, அது பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம், பிறப்பு இறப்பு பதிவு சட்டம் பிரிவு 17ன் கீழ் பிறப்பு சான்று வழங்கும் பதிவேடு என்றிருந்தது. அது பக்கம் 01 முதல் 06 வரை பதிவுகள் செய்யப்பட்டு இருந்தது. அதில் 04.01.2019-ஆம் தேதி பிறப்பு சான்றிதழ் கோரியவர்களின் விவரங்கள் வரிசை எண்.45, பதிவு எண்.5299 பதிவு செய்யப்பட்டு, கடைசி வரிசை எண்.75 பதிவு எண்.9848 என்று பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு பதிவின் கடைசியிலும் சம்மந்தப்பட்ட குழந்தையின் பெற்றோர் கையொப்பம் செய்துள்ளனர். ஆக மொத்தம் 29 பெற்றோர்கள் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்காக 04.01.2019-ஆம் தேதி தலா ரூ.200/- வீதம் வசூலிக்கப்பட்ட தொகை என்று பதிவுகள் உள்ளன. கூட்டிப்பார்க்க, மொத்தம் ரூ.5,800/- கூட்டுத்தொகை வந்தது. மேலும், இறப்பு சான்றிதழ் வழங்கும் பதிவேடு குறித்து கேட்க, திரு.தயாளன் அதனை எடுத்து ஆஜர் செய்தார்.

அதனை பார்வை செய்ய, 04.01.2019-ஆம் தேதிக்கான பதிவுகள் வரிசை எண்.20 என்றும், அதில் குறிப்பாக 04.01.2019 தேதிக்கான வரிசை எண்.01 என்றும் இறப்பு பதிவு எண்.D3422 என்றும், கடைசி பதிவு வரிசை எண்.35 மற்றும் 16 என்றும், இறப்பு பதிவு எண். D1461 என்றும் பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு பதிவின் கடைசியிலும் சம்மந்தப்பட்ட இறந்த நபரின் உறவினர் கையொப்பம் செய்துள்ளனர். ஆகமொத்தம் 16 நபர்கள், 28 இறப்பு சான்றிதழ் வழங்கியதற்கான பதிவுகள் உள்ளன. 16 நபர்களிடமிருந்து இறப்பு சான்றிதழ் வழங்கியதற்காக, 04.01.2019-ஆம் தேதி ஒரு சான்றிதழிற்கு ரூ.200/- வீதம், 28 சான்றிதழ்களுக்காக மொத்தம் ரூ.5,600/- வசூலிக்கப்பட்டதாக பதிவுகள் உள்ளன. மேற்சொன்ன இரண்டு பதிவேடுகளில் உள்ள 04.01.2019-ஆம் தேதிக்கு பிறப்பு சான்றிதழிற்காக வசூலிக்கப்பட்டதாக இருந்த பணம் ரூ.5,800/- மற்றும் இறப்பு சான்றிதழிற்காக வசூலிக்கப்பட்டதாக இருந்த பணம் ரூ.5,600/- ஆகும். ஆகமொத்தம் ரூ.11,400/-, அவரது சட்டையின் பாக்கெட்டில் இருந்த தொகையோடு ஒத்திருந்த காரணத்தினால், அந்த தொகை ரூ.11,400/- அரசிற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தொகையை பணமாக வசூல் செய்ய எந்த அதிகாரமும் இல்லாத போதும், மேற்படி ரூ.11,400/-ஆனது பொது மக்கள் அரசிற்கு செலுத்திய அரசு கட்டணமானதால், அந்த தொகையை வங்கியில் செலுத்துவதற்காக மீண்டும் திரு.தயாளன் என்பவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.தயாளன் என்பவரின் பேண்ட்டை சோதனை செய்ய, அதன் வலப்புற பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அது குறித்தும், அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று திரு.தயாளனிடம் கேட்க, அவரால் ஏதும் கூற இயலவில்லை. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் ரூ.1,800/- இருந்தது. அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு.தயாளன் என்பவரின் பேண்ட்டின் இடப்புற பாக்கெட்டை சோதனை செய்ய, அதில் கத்தையாக பணம் இருந்தது. அது குறித்தும், அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று திரு.தயாளனிடம் கேட்க, அவரால் ஏதும் கூற இயலவில்லை. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் ரூ.2,300/- இருந்தது. அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களில் இருந்த ஐநூறு ரூபாய்களின் வரிசை எண்களை பார்க்க, அதில் தகவல் சொன்ன நபர் கொடுத்ததாக சொன்ன ஐநூறு ரூபாய்களின் வரிசை எண்கள் 6TB 090715 மற்றும் 8PQ 881644 ஆகியவை இருந்தது. பின்னர் அந்த அறைக்கு உள்ளே உள்ள RECORD ROOM-மை சோதனை செய்ய, அந்த அறையில் உள்ள சிமெண்ட் அலமாரிகளில் பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அறையின் தென்கிழக்கு மூலையில் ஒரு கணினி மேஜை மீது வைக்கப்பட்டிருந்தது. அந்த கணினி மேஜையின் அருகில் இருந்த அலமாரியில் வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளின் கீழ் தனித்தனியாக மடித்து வைக்கப்பட்ட நிலையில் பணம்

இருந்தது. அதனை எடுத்து பார்க்க, அதில் பணம் ரூ.2,800/- இருந்தது. அது குறித்து திரு.தயாளன் மற்றும் திரு.நீலவண்ணன் ஆகியோர்களிடம் அவர்களால் உரிமை கோராததால், அந்த பணம் ரூ.2,800/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திரு. தயாளன் என்பவரிடம், பிறப்பு இறப்பு அலுவலர்களின் வருகை குறித்தான பதிவுகள் உள்ள வருகை பதிவேட்டை கேட்க, அவர் தங்களது வருகை பதிவேடானது Residential Medical Officer அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரப்படுவதாக சொன்னார். எனவே, திரு.இன்பராஜ், Residential Medical Officer என்பவருக்கு தகவல் தெரிவிக்க, அவரது உத்திரவுப்படி திருமதி.சிவகாமி, டெலிபோன் ஆபரேட்டர் என்பவர் சம்பவயிடத்திற்கு வருகை பதிவேட்டை எடுத்து வந்து ஆஜர்படுத்தினார். அந்த வருகை பதிவேட்டை பார்வையிட, அதில் பக்கம் 01 முதல் 36 வரை பதிவுகள் இருந்தது. அதில், 2019-ஆம் வருடம் ஜனவரி மாதம் திரு.தயாளன் மற்றும் திரு.நீலவண்ணன் ஆகியோருடைய பெயர்கள் பக்கம் எண்.36-ல் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதில் திரு.தயாளன் 03.01.2019 மற்றும் 04.01.2019 ஆகிய இரு தினங்களில் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் செய்யவில்லை. மேற்படி வருகைப்பதிவேட்டை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட அனைத்து பதிவேடுகளின் சம்மந்தப்பட்ட பதிவு உள்ள பக்கங்களில், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காவல் ஆய்வாளர், சுகாதார ஆய்வாளர்கள் திரு.தயாளன் மற்றும் திரு.நீலவண்ணன் ஆகியோர்களால் கையொப்பம் செய்யப்பட்டது. மேலும், வருகைப்பதிவேட்டில், அதனை ஆஜர்படுத்திய திருமதி.சிவகாமி, டெலிபோன் ஆபரேட்டர் என்பவரிடமும் கூடுதலாக கையொப்பம் பெறப்பட்டது. இந்த வழக்கு சொத்தான, தக்க முகாந்திரம் கூற முடியாத பணம் ரூ.6,900/- (ரூபாய் 500 நோட்டுகள் x 2 = 1,000 + ரூபாய் 200 நோட்டுகள் x 9= 1,800 + ரூபாய் 100 நோட்டுகள் x 32=3,200 + ரூபாய் 50 நோட்டுகள் x 11=550 + ரூபாய் 20 நோட்டுகள் x6= 120+ ரூபாய் 10 நோட்டுகள் x 23= 230) வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டு, இந்த திடீர் சோதனை இரவு 2330 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி அலுவலகத்திலிருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், சுகாதார ஆய்வாளர்கள் திரு.K.தயாளன், த/பெ கனகராஜ் மற்றும் திரு.V.நீலவண்ணன் த/பெ வெங்கடேசப்பிள்ளை ஆகியோர்களுக்கும், திடீர் தணிக்கையின்போது மகப்பேறு பிரிவிற்கு வெளியில் ஆஜரில் இருந்த ஊழியர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், மகப்பேறு பிரிவானது, திடீர் தணிக்கை செய்த பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ளது.அந்த பிரிவில் தணிக்கை அலுவலர்கள் யாரும் உள்ளே செல்லவில்லை. மேற்படி திடீர் இருதுறை சோதனையில், முகாந்திரம் கூற இயலாத மற்றும்

கணக்கில் வராத பணம் ரூ.6,900/-ஆனது வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இயங்கி வரும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் அலுவலகத்தில், பிறப்பு மற்றும் இறப்பை பதிவு செய்ய வரும் ஏழை பொது மக்களிடம் அரசிற்கு செலுத்த வேண்டிய கட்டணமான ரூ.200/-ஐ தவிர கூடுதலாக ரூ.50/- முதல் ரூ.150/- வரை ஏழை பொது மக்களை கட்டாயப்படுத்தி, லஞ்சமாக பணம் வசூல் செய்து வைத்திருந்த திரு.K.தயாளன், த/பெ கனகராஜ், சுகாதார ஆய்வாளர் (நிலை-1), அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கத்தாழம்பட்டு, கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம், அயல் பணி:வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகம் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் மேற்படி திடீர் இருதுறை கூட்டுச்சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்ட ரு.6,900/- பணத்தை அரசு கருவூலத்தில் செலுத்தி அதற்கான ஒப்புகைச் சீட்டினை தங்களுக்கு அளிக்கிறேன். மேலும் மேற்படி வழக்கு சொத்தான ரூ.6,900/-தை தாங்கள் கோரும் பட்சத்தில் தங்களுக்கு கருவூலத்திலிருந்து எடுத்து தருகிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.ஒப்பம் XXXX 05.01.2019 S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர். ஐயா, மேற்படி புகார் மனுவினை பெற்று ஊழல் தடுப்பு (திருத்தச் சட்டம்) 2018ன் படி பொது ஊழியர்கள் மீது விசாரணை மேற்கொள்வது சம்மந்தமாக துணை சட்ட ஆலோசகர் அவர்களிடம் கருத்துரு பெற்று இன்று 28.01.2019 ம் தேதி பகல் 1230 மணிக்கு வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 04/2019 பிரிவு 102 கு.வி.மு.ச உடன் இணைந்த 7 ஊழல் தடுப்பு (திருத்தச் சட்டம்) 2018-ன் படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். ஒப்பம் XXXX (S.Vijayalaksmi) Inspr. of Police, V&AC, Vellore.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மற்றும் இரு துறை திடீர் கூட்டுசோதனையின் செயல்முறை ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிக்கொள்ளப்பட்டது.

S. Vijayalakshmi 28/1/19

(S.விஜயலட்சுமி)
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை
வேலூர்